
சிவாய நம:
திருச்சிற்றம்பலம்

திருவருள் நல்கும்
பஞ்ச புராணம்



நால்வர் பொற்றாள் எம்உயிர் துணையே

வெளியீடு:

ஆதிசைவர்கள் நலவாழ்வு மையம்
வைதீக சைவ சித்தாந்த மஹா சபை

கள்ளக்குறிச்சி-606202. விழுப்புரம் மாவட்டம்.
செல்: 97518 48933
thillaishivam@gmail.com

2-ஆம் பதிப்பு: 2015
சலுகை விலை : ரூ.5/-

உ
சிவாய நம:
திருச்சிற்றம்பலம்

மகுடங்கள்

1) ஹர ஹர நம: பார்வதி பதயே
ஹர ஹர மஹாதேவா.
2) சித்ஸபேசா, சிவசிதம்பரம்
3) தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி
4) ஏகம்பத்துறை யெந்தாய் போற்றி
பாகம் பெண்ணுருவானாய் போற்றி
5) அண்ணாமலை எம் அண்ணா போற்றி
கண்ணார் அமுதக்கடலே போற்றி
6) ஆரூர் அமர்ந்த அரசே போற்றி
சீரார் திருவையாறா போற்றி
7) பராய்த்துறை மேவிய பரனே போற்றி
சிராப்பள்ளி மேவிய சிவனே போற்றி
8) குற்றாலத் தெம் கூத்தா போற்றி
கோகழி மேவிய கோவே போற்றி
9) அருளிட வேண்டும் அம்மான் போற்றி
இருள்கெட அருளும் இறைவா போற்றி
10) ஆடக மதுரை அரசே போற்றி
கூடல் இளங்குரு மணியே போற்றி
11) தென்தில்லை மன்றினுள் ஆடி போற்றி
இன்று எனக்கு ஆர்அமுது ஆனாய் போற்றி
12) அருமையில் எளிய அழகே போற்றி
கருமுகில் ஆகிய கண்ணே போற்றி
13) மண்ணிய திருஅருள் மலையே போற்றி
சென்னியில் வைத்த சேவக போற்றி
14) காவாய்க் கனகத்திரளே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி

திருச்சிற்றம்பலம்

உ

சிவாயநம:

திருச்சிற்றம்பலம்

முன்னுரை

"மண்ணில் மறையோர் மருவு வைதிகமும்
மா தவமும் மற்றும் உலகத்து
எண் இல் பொருள் ஆயவை படைத்த
இமையோர்கள் பெருமானது இடமாம்
நண்ணி வரு நாவலர்கள்
நாள்தொறும் வளர்க்க நிகழ்கின்ற புகழ்சேர்
விண் உலவு மாளிகை நெருங்கி
வளர் நீள்புரிசை வீழிநகரே."

- ஞானசம்பந்தர் தேவாரம்

"சைவத்தின் மேல் சமயம் வேறில்லை அதில் சார் சிவமாம் தெய்வத்தின் மேல் தெய்வம் இல்லை" என்ற திருவாக்கிற்கேற்ப சைவ சமயத்தின் தனிப்பெருங் கடவுளாகிய சிவபெருமானை போற்றி துதித்த தோத்திரங்களாக விளங்கக்கூடியவை, திருஞானசம்பந்தர் உள்ளிட்ட அருளாளர்களால் அருளப்பட்ட பன்னிரு திருமுறைகளாகும்.

"கண்ட பெரு மந்திரமே மூவர் பாடல்" என்ற வாக்கிற்கிணங்க தோவாரத் திருமுறைகள் மந்திர ஆற்றல் உடையவைகளாக விளங்கக்கூடியவை, "காதலாகி கசிந்து கண்ணீர் மல்க" சிவபெருமான் திருமுன் நின்று மனம் உருகி ஓதுபவரின் தீய வினைகளை நீக்கும் வல்லமை திருமுறைகளுக்கே உரிய தனிச்சிறப்பாகும்.

தேவாரத்திருமுறைகள் முற்காலத்தில் நமது முன்னோர்களால் குறிப்பாக, பிற்காலச் சோழர்கள் காலத்தில் பெரிதும் போற்றப்பட்டு வந்துள்ளது. திருக்கோயில்களில் திருமுறைகளை வைத்து பூஜித்து வழிபட்டு வந்த மண்டபம் "**திருக்கைக்கோட்டி மண்டபம்**" என்று வழங்கப்பட்டதாக கல்வெட்டுகளால் அறிய முடிகிறது.

குலோத்துங்க சோழன் நாலாம் ஆட்சியாண்டில் சீர்காழி திருஞானசம்பந்தர் கோயிலில் உள்ள "**திருக்கைக்கோட்டி மண்டபத்தில்**" தேவாரத் திருமுறைகளை வைத்து வழிபாடு செய்து வந்துள்ளனர். மேலும், ஆதித்த சோழன் காலத்திலேயே ஆலயங்களில் திருப்பதியம் ஓதும் முறை முதலில் கடைபிடிக்கப் பட்டது என்பதும், பின்பு முதலாம் இராஜஇராஜசோழன் காலத்தில் விரிவு படுத்தப்பட்டதையும் கல்வெட்டுகளால் அறிய முடிகிறது.

முதலாம் இராஜஇராஜசோழன் தான் கட்டிய தஞ்சை பெரிய கோவிலில் திருப்பதியம் விண்ணப்பம் செய்ய 48 பிடாரர்களையும் இவர்களுக்கு துணையாக உடுக்கை வாசிக்க ஒருவரையும் கொட்டி மத்தளம் வாசிக்க ஒருவரையும் நியமித்த செய்தியையும்,

முதலாம் இராஜஇராஜசோழன் காலத்தில் கங்கை கொண்ட சோழபுரம் கோவிலிலும், திருக்களர் ஆலயத்திலும் திருப்பதியம் விண்ணப்பம் செய்யப்பட்டதையும்,

மூன்றாம்குலோத்துங்கசோழன்ஆட்சியில் திருவாமத்தூர் அபிராமேஸ்வரர் ஆலயத்தில திருப்பதிகம் விண்ணப்பம் செய்தவர் பெயர் இராஜஇராஜபிச்சன் என்பதையும்.

இராஜகேசரிவர்மன் காலத்தில் திருவொற்றியூர் கோவிலில் திருப்பதியம் விண்ணப்பம் செய்ய ஊர் சபையார் நிலம் வழங்கியதையும்

மதுரை கொண்ட கோப்பரகேசரிவர்மனுடைய ஆட்சியில் சிவகோசரிபிடாரன் லால்குடி சப்தரிஷீஸ்வரா ஆலயத்தில், பிராமணர் இருவர் திருப்பதியம் விண்ணப்பம் செய்ய நிலம் அளித்ததையும்,

இராஜேந்திர சோழன் ஆட்சியில் சிதம்பரம் நடராஜர் ஆலயத்தில் இறைவன் மாசித்திருநாளில் கடலுக்கு எழுந்தருளும் பொழுது திருத்தொண்டத்தொகை விண்ணப்பம் செய்ய நிவந்தம் அளித்ததையும்.

இராஜேந்திர சோழன் கீழுர் கல்வெட்டில், திருக்கோவிலூர் வீரட்டேஸ்வரர் ஆலயத்தில், உரிமை பணிபுரியும் சிவ பிராமணர் ஆகிய கௌசிகன் மல்லன் அமுதன் என்பவன், வீரட்டேஸ்வரர் மார்கழித் திங்கள் திருவாதிரை அன்று எழுந்தருளும் பொழுது திருவெம்பாவை விண்ணப்பம் செய்ய அரங்கநாத செம்பியன் மூலம் நான்குமா நிலம் அளித்ததையும்.

கி.பி.1970ல் சோழ நாட்டை ஆண்ட அதிஇராஜேந்திர சோழன் என்பவன் கொடிய நோயால் துன்புற்றபோது தஞ்சை மாவட்டம் கூகூரில் உள்ள சிவாலயத்தில் இறைவன் திருமுன்பே நோய் தீரும் பொருட்டு நாள்தோறும் இருமுறை திருப்பதியம் விண்ணப்பம் செய்யப்பட்டதையும் போன்ற பல செய்திகள் கல்வெட்டுகளால் அறிய முடிகிறது.

மேலும், முதலாம் குலோத்துங்கசோழனின் படைத் தலைவருள் ஒருவராக விளங்கிய, மணவில் கூத்தனான காளிங்கராயன் என்ற சிறந்த சிவபக்தன் தில்லையில் தேவார திருமுறைகளை ஓதுவதற்கும் அதனை அன்பர்கள் செவிமடுத்து இன்புறுவதற்கும் ஆக ஒரு மண்டபத்தை செய்தான் என்பதனை,

நட்டப்பெருமானார் ஞானம் குழைத்தளித்த
சிட்டப் பெருமான் திருப்பதியம் - முட்டாமைக்
கேட்போர்க்கு மண்டபத்தை செய்தான் - தெவ் வேந்தர்கெட
வாட்போக்கும் தொண்டையர்க்கோன் மன்.

என்ற கல்வெட்டுப் பாடலால் அறிய முடிகிறது.

இவ்வாறு, நமது முன்னோர்கள் தேவார திருமுறைகளை மிகப் பெரிய அளவில் போற்றியும் வழிபட்டும் வந்துள்ளனர்.

இத்தகைய சிறப்புமிக்க தேவார திருமுறைகளை சிவபெருமான் கேட்க மிகுந்த விருப்பப்படுகின்றான் என்பதனை,

"இருந்து நீர் தமிழோடு இசை கேட்கும்
இச்சையால் காசு நித்தல் நல்கினீர்
அருந்தன் வீழி கொண்டீர் அடியேற்கும் அருளுதிரே."

என்ற சுந்தரமூர்த்தி சுவாமிகளின் தேவாரத்தின் மூலம் அறிய முடியும். தேவார திருமுறை தோத்திரங்களை இறைவன் திருமுன் நின்று விண்ணப்பம் செய்யும் பொழுது இறைவன் நமக்கு அன்பராய் விளங்கி அருள் புரிகின்றான் என்பதை,

"தொழுது எழுந்து ஆடிப்பாடித் தோத்திரம் பலவுஞ் சொல்லி
அழுமவர்க்கு அன்பர் போலும் ஆவடுதுறையனாரே."

என்ற திருநாவுக்கரசர் தேவாரம் மூலமும் நாம் உணரலாம்.

எனவே, இத்தகைய அதிஉன்னதமான சிறப்பு வாய்ந்த தேவார திருமுறைகளை நாள்தோறும் சிவாலயம் சென்று வழிபாடு செய்து சிவபெருமான நேர் நின்று பன்னிரு திருமுறைகளை ஓதி வழிபட நம் வினைகள் அனைத்தும் நீங்கி இக பர சுகங்களை அடைவது உறுதியாகிறது. இதனை,

"பரவி நாள்தொறும் பாடுவார் வினை
பற்று அறுக்கும் பைஞ்ஞீலியீர்."

என்கிறார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

பொதுவாக ஆலயங்களிலும், அன்பர்கள் ஆன்ம பூஜையிலும் பன்னிரு திருமுறைகளிலிருந்து, திருப்பாடல்களை ஓதி வழிபடவேண்டுவது முறையாயினும்,தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பெரிய புராணம் என்னும் ஐந்து திருப்பாடல்களை ஓதி வழிபடுவது வழக்கத்தில் உள்ளது. இவ்வாறு இவ்வைந்து திருமுறை பாடல்களை ஓதி வழிபடுவதை பஞ்ச புராணம் விண்ணப்பித்தல் என்று அழைப்பார்கள்.

அடியார் பெருமக்கள் அனைவரும் தங்களது நாள் வழிபாட்டிலேயும், ஆன்மார்ந்த பூஜை வழிபாட்டிலேயும் பஞ்சப் புராண திருப்பாடல்களை ஓதி வழிபடுவதற்கு உதவியாக, பாடல்களை தொகுத்து வெளியிடுதல் வேண்டும் என்ற எண்ணத்தோடும், சிறுவர், சிறுமியர்களிடையே பஞ்ச புராணம் ஓதுதலை ஊக்குவிக்க வேண்டும், என்ற எண்ணத்தோடும் "**திருவருள் நல்கும் பஞ்ச புராணம்**"என்ற இந்நூல் நமது அமைப்பின் சார்பாக வெளியிடப் படுகின்றது. இந்நூல் வெளிவருவதற்கு உறுதுணையாக இருந்த புவனேஷ். க. முருகன் மற்றும் ஸ்ரீ சத்யா பிரிண்டர்ஸ் உரிமையாளர்கள். இராம.கிருஷ்ணமூர்த்தி, சோம.இராமமூர்த்தி அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

சிவஅன்பர்கள் அனைவரும் இந்நூலினைப் பெற்று பஞ்ச புராணத் அருட்பாடல்களை நாளும் ஓதி நல்லருள் பெற்று நலமுடன் வாழ தில்லை கூத்தன் திருவடியை சிந்தித்து ப்ராத்தனை செய்கின்றோம்.

இங்ஙனம்
மாதொருபாகனார்க்கு வழி வழி அடிமையான்
தில்லை.எஸ்.கார்த்திகேயசிவம் M.A.,
நிறுவனர்
ஆதிசைவர்கள் நலவாழ்வு மையம்
வைதிக சைவ சிந்தாந்த மஹா ஸபை
சன்னதி தெரு, பொரசக்குறிச்சி-606203,
கள்ளக்குறிச்சி Tk.

உ

சிவாயநம:

திருச்சிற்றம்பலம்



ஸ்ரீ விநாயகர் துதி

திருவாக்கும் : செய்கருமம் கைகூட்டும் செஞ்சொல்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலால் கூப்புவர்தம் கை.



ஸ்ரீ முருகன் துதி

அஞ்சுமுகம் தோன்றின் ஆறுமுகம் தோன்றும்
வெஞ்சமரில் அஞ்சலென வேல் தோன்றும் - நெஞ்சில்
ஒருகால் நினைக்கில் இருகாலுந் தோன்றும்
முருகா வென்றோது வார்முன்.



நால்வர் துதி

பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர்கோன் கழல்போற்றி
ஆழிமிசைக் கல்மிதப்பில் அணைந்தபிரான் அடிபோற்றி
வாழிதிரு நாவலூர் வன்தொண்டர் பதம் போற்றி
ஊழிமலி திருவாதவூரர் திருத்தாள் போற்றி.

சைவத்தின் மேல் சமயம் வேறில்லை - அதில சார் சிவமாம்
தெய்வத்தின்மேல் தெய்வம் இல்லை என்னும் நான்மறைச்
செம்பொருள் வாய்மை வைத்த சீர்த்திரு தேவாரமும் திருவாசகமும்
உய்வைத் தரம்செய்த நால்வர் பொற்றாள்எம் உயிர்த்துணையே

திருச்சிற்றம்பலம்

உ

சிவாயநம:

திருச்சிற்றம்பலம்

திருமுறைகளின் சிறப்பு

திருமுறையே சைவநெறிக் கருவூலம்
தென்தமிழின் தேன்பா காகும்
திருமுறையே கயிலையின்கண் சிவபெருமான்
செவிமடுத்த செந்தமிழ் வேதம்
திருமுறையே நடராசன் கரம்வருந்த
எழுதியருள் தெய்வ நூலாம்
திருமுறையே சொக்கேசன் மதிமலிவாய்
மலர்ந்தருளும் சிறப்பிற் றாமல்

பன்னிரு திருமுறை ஆசிரியர்கள்

திருஞான சம்பந்தர், வாகீசர், சுந்தரர்
திருவாத வூரர் மற்றைத்
திருமாளிகைத் தேவர், சேந்தனார், கருவூரார்
தெள்ளு பூந்துருத்தி நம்பி
வருஞானகண்டரா தித்தர், வேணாட்டடிகள்
வாய்ந்த திருவாலி யமுதர்
மருவு புருடோத்தமர், சேதிராயர், மூலர்
மன்னு திருஆல வாயர்
ஒருகாரைக் காலம்மை ஐயடிகள், சேரமான்,
ஒளிர் கீரர், கல்லாடனார்
ஒண்கபிலர், பரணர் மெய்உணர் இளம்பெருமானோடு
ஓங்கும் அதிரா அடிகளார்
திருமேவு பட்டினத் தடிகளோடு
நம்பி யாண்டார் நம்பி சேக்கிழாரும்
சிவநெறித்திருமுறைகள் பன்னிரண்டருள் செய்த
தெய்வீகத் தன்மையோரே.

திருச்சிற்றம்பலம்

பஞ்சபுராணம்-I

1) தேவாரம் (திருஞானசம்பந்தர் அருளியது)

பண்-காந்தாரபஞ்சமம்) திருச்சிற்றம்பலம் (3-ம் திருமுறை

ஆடினாய் நறு நெய்யோடு பால் தயிர்,
அந்தணர் பிரியாத சிற்றம்பலம்
நாடினாய் இடமா நறுங்கொன்றை
நயந்தவனே
பாடினாய் மறையோடு பல்கீதமும் பல்சடைப்பனி
கால்கதிர் வெண் திங்கள்
சூடினாய் அருளாய் சுருங்க எம தொல்வினையே.

2) திருவாசகம் (மாணிக்கவாசகர் அருளியது)

(8-ம் திருமுறை

கொள்ளேன் புரந்திரன், மால், அயன் வாழ்வு குடி கெடினும்
நள்ளேன் நினது அடியாரொடு அல்லால் நரம்புகினும்
எள்ளேன் திருஅருளாலே இருக்கப்பெறின் இறைவா!
உள்ளேன் பிற தெய்வம், உன்னை அல்லாது எங்கள்
உத்தமனே.

3) திருவிசைப்பா (திருமாளிகைத்தேவர் அருளியது)

பண் - பஞ்சமம் (9-ம் திருமுறை

தனதனநற் றோழா! சங்கரா! சூல
பாணியே! தாணுவே! சிவனே!
கனகநற் றூணே! கற்பகக் கொழுந்தே!
கண்கள்மூன்று உடையதோர் கரும்பே!
அனகனே! குமர விநாயக சனக!
அம்பலத்து அமரர் சேகரனே
உனகழல் இணையென் நெஞ்சினுள் இனிதாத்
தொண்டனேன் நுகருமா நுகரே.

4) திருப்பல்லாண்டு (சேந்தனார் அருளியது)

பண் - பஞ்சமம்) (9-ம் திருமுறை


"மண்ணுக தில்லை! வளர்க நம்
பத்தர்கள் வஞ்சகர்கள் போய் அகல
பொன்னின்செய் மண்டபத்துள்ளே புகுந்து
புவனி எலாம் விளங்க
அன்னநடை மடவாள் உமைகோன்
அடியோமுக்கு அருள்புரிந்து
பின்னை பிறவி அறுக்க நெறிதந்த
பித்தற்குப் பல்லாண்டு கூறிதுமே."

5) பெரிய புராணம் (சேக்கிழார் அருளியது)

(12-ம் திருமுறை

"உலகெலாம் உணர்ந்தோதற் கரியவன்
நிலவுலாவிய நீர்மலி வேணியன்
அலகில்சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சிலம்படி வாழ்த்தி வணங்குவோம்."

திருச்சிற்றம்பலம்



சிவாயநம:

திருச்சிற்றம்பலம்

பஞ்சபுராணம்-2

1) தேவாரம் (சுந்தரர் அருளியது)

பண்-நட்டராகம்) திருச்சிற்றம்பலம் (7-ம் திருமுறை

"எங்கேனும் இருந்து உன் அடியேன் உனை நினைத்தால்
அங்கே வந்து என்னொடும் உடன் ஆகி நின்று அருளி
இங்கே என் வினையை அறுத்திட்டு எனை ஆளும்
கங்காநாயகனே கழிப்பாலை மேயானே."

2) திருவாசகம் (மாணிக்கவாசகர் அருளியது)

(8-ம் திருமுறை

போற்றி! ஓம், நமச்சிவாய! புயங்கனே, மயங்குகின்றேன்,
போற்றி! ஓம், நமச்சிவாய! புகழ் இடம் பிறிது ஒன்று இல்லை,
போற்றி! ஓம், நமச்சிவாய! புறம் எனைப் போக்கல்,கண்டாய்,
போற்றி! ஓம், நமச்சிவாய! சய! சய! போற்றி! போற்றி!

3) திருவிசைப்பா (திருமாளிகைத்தேவர் அருளியது)

பண் - பஞ்சமம் (9-ம் திருமுறை

திருநெடு மால் இந்திரன் அயன் வானோர்
திருக்கடைக் காவலின் நெருக்கிப்
பெருமுடி மோதி உருகுமணி முன்றில்
பிறங்கிய பெரும்பற்றப் புலியூர்ச்
செருநெடு மேரு வில்லின்முப் புரம்தீ
விரித்தசிற் றம்பலக் கூத்தா!
கருவடி குழைக்கா(து) அமலச்செங் கமல
மலர்முகம் கலந்த(து) என் கருத்தே.

4) திருப்பல்லாண்டு (சேந்தனார் அருளியது)

பண் - பஞ்சமம்) **(9-ம் திருமுறை**

சேவிக்க வந்தயன் இந்திரன்
செங்கண்மால் எங்குந்திசை திசையன
கூவிக் கவர்ந்து நெருங்கிக்
குழாங்குழா மாய்நின்று கூத்தாடும்
ஆவிக்(கு) அமுதைஎன் ஆர்வத்
தனத்தினை அப்பனை ஒப்பமரர்
பாவிக்கும் பாகவத்(து) அப்புறத்
தானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

5) பெரிய புராணம் (சேக்கிழார் அருளியது)

(12-ம் திருமுறை

கற்பனை கடந்த சோதி
கருணையே உருவமாகி
அற்புதக் கோலம் நீடி
அருமறைச் சிரத்தின் மேலாம்
சிற்பர வியோமமாகும் திருச்
சிற்றம் பலத்துள் நின்று
பொற்புடன் நடம்செய்கின்ற
பூங்கழல் போற்றி போற்றி.

திருச்சிற்றம்பலம்

உ

சிவாயநம:

திருச்சிற்றம்பலம்

பஞ்சபுராணம்-3

1) தேவாரம் (திருநாவுக்கரசு அருளியது)

திருத்தாண்டகம்) திருச்சிற்றம்பலம் (6-ம் திருமுறை

"பேராயிரம் பரவி வானோர் ஏத்தும்
பெம்மானைப் பிரிவு இலா அடியார்க்கு என்றும்
வாராத செல்வம் வருவிப்பானை
மந்திரமும் தந்திரமும் மருந்தும் ஆகித்
தீரா நோய் தீர்த்து அருளவல்லான் தன்னைத்
திரிபுரங்கள் தீ எழத் திண் சிலை கைக் கொண்ட
போராளைப் புள்ளிருக்கு வேளூரானைப்
போற்றாதே ஆற்ற நாள் போக்கினேனே."

2) திருவாசகம் (மாணிக்கவாசகர் அருளியது)

(8-ம் திருமுறை

"கடையவனேனைக் கருணையினால்
கலந்து, ஆண்டு கொண்ட
விடையவனே, விட்டுடுதி கண்டாய்?
விறல் வேங்கையின் தோல்
உடையவனே! மன்னும் உத்தர
கோசமங்கைக்கு அரசே!
சடையவனே! தளர்ந்தேன், எம்பிரான்,
என்னைத் தாங்கிக் கொள்ளே."

3) திருவிசைப்பா (சேந்தனார் அருளியது)

பண் - பஞ்சமம் (9-ம் திருமுறை

"ஏகநாயகனை, இமயவர்க்கு அரசை
என் உயிர்க்கு அமுதினை, எதிர்இல்
போக நாயகனை, புயல்வணற்கு அருளிப்
பொன் நெடும் சிவிகையா ஊர்ந்த
மேக நாயகனை மிகுதிருவீழி
மிழலை விண்இழி செழும் கோயில்
யோகநாயகனை அன்றி, மற்று ஒன்றும்
உண்டு என உணர்கிலேன் யானே."

4) திருப்பல்லாண்டு (சேந்தனார் அருளியது)

பண் - பஞ்சமம்) (9-ம் திருமுறை

பாலுக்குப் பாலகன் வேண்டி
அழுதிடப் பாற்கடல் ஈந்தபிரான்;
மாலுக்குச் சக்கரம் அன்(று) அருள்
செய்தவன் மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற
சிற்றம்பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயில வல்லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே."

5) பெரிய புராணம் (சேக்கிழார் அருளியது)

(12-ம் திருமுறை

மண்ணில் பிறந்தார் பெறும் பயன் மதி சூடும்
அண்ணலார் அடியார் தமை அமுது செய்வித்தல்
கண்ணிலால் அவர் நல்விழாப் பொலிவு கண்டு ஆர்தல் ;
உண்மையாய் எனில் உலகர் முன் வருக."என உரைப்பார்.

திருச்சிற்றம்பலம்



உ

சிவாய நம:

திருச்சிற்றம்பலம்

பஞ்சபுராணம் – 4

1) தேவாரம் (திருநாவுக்கரசு அருளியது)

திருத்தாண்டகம்) திருச்சிற்றம்பலம் (6-ம் திருமுறை

உருத்திரனை உமாபதியை உலகு ஆளானை
உத்தமனை நித்திலத்தை ஒருவன் தன்னைப்
பருப்பத்தைப் பஞ்சவடி மார்பினானைப்
பகல்இரவாய் நீர்வெளியாய்ப் பரந்து நின்ற
நெருப்பு அதனை நித்நிலத்தின் தொத்து ஒப்பானை
நீறு அணிந்த மேனியராய் நினைவார் சிந்தைக்
கருந்தவனைக் கஞ்சனூர் ஆண்ட கோவைக்
கற்பகத்தை கண்ணாரக் கண்டு உய்ந்தேனே.

2) திருவாசகம் (மாணிக்கவாசகர் அருளியது)

(8-ம் திருமுறை

விண்ஆளும் தேவர்க்கும் மேல் ஆய வேதியனை
மண் ஆளும் மன்னவர்க்கும் மாண்புஆகி நின்றானைத்
தன்ஆர் தமிழ் அளிக்கும் தண்பாண்டி நாட்டானைப்
பெண்ஆளும் பாகனைப் பேணு பெருந்துறையில்
கண்ஆர் கழல் காட்டி, நாயேனை ஆட்கொண்ட
அண்ணா மலையானைப் பாடுதும்காண், அம்மானாய்.

3) திருவிசைப்பா (கருவூர்த் தேவர் அருளியது)

பண் – பஞ்சமம்) (9-ம் திருமுறை

செங்கணா போற்றி; திசைமுகா போற்றி!
சிவபுர நகருள் வீற்றிருந்த
அங்கணா போற்றி; அமரனே போற்றி!
அமரர்கள் தலைவனே போற்றி!
தங்கள் நான் மறை நூல் சகலமுங் கற்றோர்
சாட்டியக் குடியிருந் தருளும்
எங்கள் நாயகனே! போற்றி! ஏழ் இருக்கை
இறைவனே! போற்றியே போற்றி!

4) திருப்பல்லாண்டு (சேந்தனார் அருளியது)

பண் – பஞ்சமம்) (9-ம் திருமுறை

"நிட்டைஇலா உடல் நீத்து என்னை ஆண்ட
நிகர் இலா வண்ணங்களும்
சிட்டன் சிவனடியாரைச் சீராட்டும்
திறங்களுமே சிந்தித்து
அட்டமூர்த்திக்கு என், அகம்நெக ஊறும்
அமிர்தினுக்கு ஆலநீழல்
பட்டனுக்கு என்னைத் தன்பால் படுத்தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே."

5) பெரிய புராணம் (சேக்கிழார் அருளியது)

(12-ம் திருமுறை

வேத நெறி தழைத்தோங்க
மிகு சைவத் துறைவிளங்கப்
பூதப்பரம் பரைபொலியப்
புனிதவாய் மலர்ந்தழுத
சீதவள வயற்புகலித்
திருஞானசம்பந்தர்
பாதமலர் தலைக்கொண்டு
திருத்தொண்டு பரவுவாம்."

திருச்சிற்றம்பலம்

உ

சிவாயநம:

திருச்சிற்றம்பலம்

பஞ்சபுராணம்-5

1) தேவாரம் (திருநாவுக்கரசு அருளியது)

திருத்தாண்டகம்) திருச்சிற்றம்பலம் (6-ம் திருமுறை

எல்லா உலகமும் ஆனாய் நீயே
ஏகம்பம் மேவி இருந்தாய் நீயே
நல்லாரை நன்மை அறிவாய் நீயே
ஞானச்சுடர் விளக்காய் நின்றாய் நீயே
பொல்லா வினைகள் அறுப்பாய் நீயே
புகழ்ச் சேவடி என்மேல் வைத்தாய் நீயே
செல்வாய செல்வம் தருவாய் நீயே
திருவையாறு அகலாத செம்பொற்ஜோதீ

2) திருவாசகம் (மாணிக்கவாசகர் அருளியது)

(8-ம் திருமுறை

நானேயோ தவம் செய்தேன்? சிவாய நம எனப்பெற்றேன்
தேனாய் இன்அமுதமாய்த் தித்திக்கும் சிவபெருமான்
தானே வந்து எனது உள்ளம் புகுந்து,அடியேற்கு அருள்செய்தான்
ஊன் ஆகும் உயிர் வாழ்க்கை ஒறுத்து அன்றே வெறுத்திடவே.

3) திருவிசைப்பா (பூந்துருத்தி நம்பி காட நம்பி அருளியது)

பண் - சாளரப்பாணி) (9-ம் திருமுறை

கடியார் கணம்புல்லர் கண்ணப்பர் என்றுன்
அடியார் அமருலகம் ஆளநீ ஆளாதே
முடியா முத்தீ வேள்வி மூவாயி ரவரொடும்
குடிவாழ்க்கை கொண்டுநீ குலாவிக்கூத் தாடினையே

4) திருப்பல்லாண்டு (சேந்தனார் அருளியது)

பண் - பஞ்சமம்) (9-ம் திருமுறை

சீருந் திருவும் பொலியச்
சிவலோக நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு
பெற்றேன்; பெற்றது ஆர் பெறுவார் உலகில்?
ஊரும் உலகும் கழற
உளறி உமை மணவாளனுக்கு ஆள்
பாரும் விசும்பும் அறியும்
பரிசுநாம் பல்லாண்டு கூறுதுமே.

5) பெரிய புராணம் (சேக்கிழார் அருளியது)

(12-ம் திருமுறை

அண்ணலே எனை ஆண்டு கொண்டு அருளிய அமுதே
விண்ணிலே மறைந்து அருள்புரி வேதநாயகனே
கண்ணினால் திருக்கயிலையில் இருந்த நின்கோலம் நண்ணி
நான்தொழ நயந்து அருள்புரி எனப் பணிந்தார்.

திருச்சிற்றம்பலம்



உ

சிவாயநம:

திருச்சிற்றம்பலம்

பஞ்சபுராணம்-6

1) தேவாரம் (சுந்தரர் அருளியது)

பண்-நட்டராகம்) திருச்சிற்றம்பலம் (7-ம் திருமுறை

பொன்னார் மேனியனே புலித்தோலை
அரைக்கு அசைந்து
மின்னார் செஞ்சடைமேல் மிளிர்
கொன்றை அணிந்தவனே
மன்னே மாமணியே மழபாடியுள்
மாணிக்கமே
அன்னே உன்னை அல்லால்
இனியாரை நினைக்கேனே.

2) திருவாசகம் (மாணிக்கவாசகர் அருளியது)

(8-ம் திருமுறை

தந்தது, உன் தன்னைக் கொண்டது என் தன்னைச்
சங்கரா! ஆர்கொலோ, சதுரர்?
அந்தம் ஒன்று இல்லா ஆனந்தம் பெற்றேன்,
யாது நீ பெற்றது ஒன்று என்பால்?
சிந்தையே கோயில் கொண்ட எம்பெருமான்!
திருப்பெருந்துறை உறை சிவனே!
எந்தையே! ஈசா! உடல் இடம் கொண்டாய்,
யான் இதற்கு இலன், ஓர் கைம்மாறே.

3) திருவிசைப்பா (கண்டராதித்தர் அருளியது)

பண் - பஞ்சமம்) (9-ம் திருமுறை

முத்தீயாளர் நான்மறையர்
மூவாயிரவர் நின்னொடு
ஒத்தேவாழும் தன்மையாளர்
ஓதிய நான்மறையைத்
தெத்தேஎன்று வண்டு பாடும்
தென்தில்லை அம்பலத்துள்
அத்தா உன்றன் ஆடல் காண
அணைவதும் என்று கொலோ.

4) திருப்பல்லாண்டு (சேந்தனார் அருளியது)

பண் - பஞ்சமம்) (9-ம் திருமுறை

குழல் ஒலி, யாழ் ஒலி, கூத்து ஒலி, ஏத்து ஒலி
எங்கும் குழாம் பெருகி,
விழவு ஒலி விண் அளவும் சென்று விம்மி,
மிகு திரு ஆரூரின்
மழ விடையாற்கு வழி வழி ஆளாய்
மணம் செய் குடிப் பிறந்த
பழ அடியாரொடும் கூடி எம்மானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

5) பெரிய புராணம் (சேக்கிழார் அருளியது)

(12-ம் திருமுறை

"இறவாத இன்ப அன்பு வேண்டிப் பின்
வேண்டுகின்றார்;
பிறவாமை வேண்டும்; மீண்டும் பிறப்பு உண்டேல்
உன்னை என்றும்
மறவாமை வேண்டும்; இன்னும் வேண்டும், நான்
மகிழ்ந்து பாடி
அறவா! நீ ஆடும்போது, உன் அடியின்கீழ்
இருக்க." என்றார்.

திருச்சிற்றம்பலம்

உ
சிவாயநம:
திருச்சிற்றம்பலம்

பஞ்சபுராணம்-7

1) தேவாரம் (திருஞானசம்பந்தர் அருளியது)

பண்-நட்டராகம்) திருச்சிற்றம்பலம் (2-ம் திருமுறை

என்ன புண்ணியம் செய்தனை
நெஞ்சமே இருங்கடல் வையத்து
முன்னம் நீ புரி நல்வினைப் பயனிடை
முழுமணித் தரளங்கள்
மன்னு காவிரி சூழ்திருவலஞ்சுழி
வாணனை வாயாரப்
பன்னி ஆதரித்து ஏத்தியும் பாடியும்
வழிபடும் அதனாலே.

2) திருவாசகம் (மாணிக்கவாசகர் அருளியது)

(8-ம் திருமுறை

வேண்டத் தக்கது அறிவோய் நீ!
வேண்ட, முழுதும் தருவோய் நீ!
வேண்டும் அயன், மாற்கு அரியோய் நீ!
வேண்டி என்னைப் பணி கொண்டாய்
வேண்டி நீ யாது அருள் செய்தாய்
யானும், அதுவே வேண்டின் அல்லால்
வேண்டும் பரிசு ஒன்று உண்டு என்னில்
அதுவும், உன் தன் விருப்பு அன்றே!

3) திருவிசைப்பா (சேந்தனார் அருளியது)

பண் - பஞ்சமம்) (9-ம் திருமுறை

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியை
கரையிலாக் கருணை மாகடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றஎம் சிவனைத்
திருவீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டு கண்டு உள்ளம்
குளிர என்கண் குளிர்ந்தனவே.

4) திருப்பல்லாண்டு (சேந்தனார் அருளியது)

(9-ம் திருமுறை

பண் - பஞ்சமம்)

மிண்டு மனத்தவர் போமின்கள்

மெய்யடியார்கள் விரைந்து வம்மின்

கொண்டும் கொடுத்தும் குடிகுடி

ஈசர்க்கு ஆள் செய்மின் குழாம் புகுந்து

அண்டம் கடந்த பொருள் அளவில்லாதோர்

ஆனந்த வெள்ளப் பொருள்

பண்டும் இன்றும் என்றும் உள்ள பொருள்

என்றே பல்லாண்டு கூறுதுமே.

5) பெரிய புராணம் (சேக்கிழார் அருளியது)

(12-ம் திருமுறை

நன்மைபெருகு அருள்நெறியே

வந்தணைந்து நல்லூரின்

மன்னுதிருத் தொண்டனார்

வணங்கி மகிழ்ந்து எழும் பொழுதில்

உன்னுடைய நினைப்பதனை

முடிக்கின்றோம் என்று அவர்தம்

சென்னிமிசைப் பாதமலர்

சூட்டினான் சிவபெருமான்.



திருச்சிற்றம்பலம்

உ

சிவாயநம:

திருச்சிற்றம்பலம்

பஞ்சபுராணம்-8

1) தேவாரம் **(சுந்தரர் அருளியது)**

பண்-தக்கேசி) **திருச்சிற்றம்பலம்** **(7-ம் திருமுறை**

வான நாடனே வழித்துணை மருந்தே
மாசிலாமணியே மறைப் பொருளே
ஏனமா எயிறு ஆமையும் எலும்பும்
ஈடுதாங்கிய மார்பு உடையானே
தேன் நெய் பால் தயிர் ஆட்டு உகந்தானே
தேவனே திரு ஆவடுதுறையுள்
ஆனையே எனை அஞ்சல் என்று அருளாய்
ஆர் எனக்கு உறவு அமரர்கள் ஏறே.

2) திருவாசகம் **(மாணிக்கவாசகர் அருளியது)**

(8-ம் திருமுறை

அன்றே, என் தன் ஆவியும்
உடலும், உடைமை எல்லாமும்
குன்றே அனையாய்! என்னை ஆட்
கொண்ட போதே கொண்டிலையோ?
இன்று ஓர் இடையூறு எனக்கு உண்டோ
என்தோள், முக்கண், எம்மானே!
நன்றே செய்வாய், பிழை செய்வாய்
நானே இதற்கு நாயகமே!

3) திருவிசைப்பா **(கருவூர் தேவர் அருளியது)**

பண் - பஞ்சமம்) **(9-ம் திருமுறை**

அற்புதத் தெய்வம் இதனின்மற்று உண்டோ?
அன்போடு தன்னை அஞ்செழுத்தின்
சொற்பதத் துள்வைத்து, உள்ளம் அள்ளூரும்
தொண்டருக்கு எண்திசைக் கனகம்
பற்பதக் குவையும், பைம்பொன் மாளிகையும்
பவளவாய் அவர் பணை முலையும்
கற்பகப் பொழிலும், முழுதும் ஆம், கங்கை
கொண்ட சோளேச் சரத்தானே.

4) திருப்பல்லாண்டு (சேந்தனார் அருளியது)

பண் - பஞ்சமம்) (9-ம் திருமுறை

தாதையத் தாள் அற வீசிய

சண்டிக்கு அவ்அண்டத்தொடும் உடனே

பூதலத்தோரும் வணக்கப் பொற்

கோயிலும் போனகமும் அருளிச்

சோதி மணிமுடித் தாமமும்

நாமமும் தொண்டர்க்கு நாயகமும்

பாதகத்துக்கு பரிசு வைத்தானுக்கே

பல்லாண்டு கூறுதுமே.

5) பெரிய புராணம் (சேக்கிழார் அருளியது)

(12-ம் திருமுறை

ஞானத்தின் திருஉருவை, நான்மறையின்

தனித்துணையை

வானத்தின் மிசை அன்றி மண்ணில் வளர்

மதிக் கொழுந்தை

தேன் நக்க மலர்க் கொன்றைச் செஞ்சடையார்

சீர்தொடுக்கும்

கானத்தின் எழுபிறப்பைக் கண் களிப்பக்

கண்டார்கள்.



திருச்சிற்றம்பலம்

உ
சிவாயநம:
திருச்சிற்றம்பலம்

பஞ்சபுராணம்-9

1) தேவாரம் (திருநாவுக்கரசர் அருளியது)

திருத்தாண்டகம்) திருச்சிற்றம்பலம் (6-ம் திருமுறை

வானவன்காண் வாணவர்க்கு மேல்ஆனான்காண்
வடமொழியும் தென்தமிழும் மறைகள் நான்கும்
ஆனவன்காண் ஆன்ஐந்தும் ஆடினான்காண்
ஐயன்காண் கையில் அனல் ஏந்தி ஆடும்
கானவன்கான் கானவனுக்கு அருள்செய்தான்காண்
கருதுவார் இதயத்துகமலத்து ஊறும்
தேன்அவன் காண் சென்று அடையாச் செல்வன் தான் காண்
சிவன் அவன்காண் சிவபுரத்து எம் செல்வன்தானே.

2) திருவாசகம் (மாணிக்கவாசகர் அருளியது)

(8-ம் திருமுறை

உம்பர்கட்கு அரசே! ஒழிவு அற நிறைந்த
யோகமே! ஊற்றையேன் தனக்கு
வம்பு எனப் பழுத்து, என் குடி முழுது ஆண்டு
வாழ்வு அற வாழ்வித்த மருந்தே!
செம்பொருள் துணிவே! சீர்உடைக்கழலே!
செல்வமே! சிவபெருமானே!
எம்பொருட்டு, உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்,
எங்கு எழுந்தருளுவது இனியே?

3) திருவிசைப்பா (திருவாலியமுதனார் அருளியது)

பண் - நட்டராகம்) (8-ம் திருமுறை

வான நாடுடை மைந்தனே!
ஓஎன்பன்; வந்தருளவாய் என்பன்
பால்நெய் ஐந்துடன் ஆடிய
படர்சடைப் பால் வண்ணனே! என்பன்
தேனமர் பொழில் சூழ்தரு
தில்லையுல் திருநடம் புரிகின்ற
ஏன மாமணிப் பூணணி
மார்பனே! எனக்கருள் புரியாயே.

4) திருப்பல்லாண்டு (சேந்தனார் அருளியது)

பண் - பஞ்சமம்) (9-ம் திருமுறை

மிண்டு மனத்தவர் போமின்கள்
மெய்யடியார்கள் விரைந்து வம்மின்
கொண்டும் கொடுத்தும் குடிகுடி
ஈசர்க்கு ஆள் செய்மின் குழாம் புகுந்து
அண்டம் கடந்த பொருள் அளவில்லாதோர்
ஆனந்த வெள்ளப் பொருள்
பண்டும் இன்றும் என்றும் உள்ள பொருள்
என்றே பல்லாண்டு கூறுதுமே.

5) பெரிய புராணம் (சேக்கிழார் அருளியது)

(12-ம் திருமுறை

நன்மைபெருகு அருள்நெறியே
வந்தணைந்து நல்லூரின்
மன்னுதிருத் தொண்டனார்
வணங்கி மகிழ்ந்து எழும் பொழுதில்
உன்னுடைய நினைப்பதனை
முடிக்கின்றோம் என்று அவர்தம்
சென்னிமிசைப் பாதமலர்
சூட்டினான் சிவபெருமான்.



திருச்சிற்றம்பலம்

பஞ்சபுராணம்-8

1) தேவாரம் (சுந்தரர் அருளியது)

பண்-தக்கேசி) திருச்சிற்றம்பலம் (7-ம் திருமுறை

வான நாடனே வழித்துணை மருந்தே
மாசிலாமணியே மறைப் பொருளே
ஏனமா எயிறு ஆமையும் எலும்பும்
ஈடுதாங்கிய மார்பு உடையானே
தேன் நெய் பால் தயிர் ஆட்டு உகந்தானே
தேவனே திரு ஆவடுதுறையுள்
ஆனையே எனை அஞ்சல் என்று அருளாய்
ஆர் எனக்கு உறவு அமரர்கள் ஏறே.

2) திருவாசகம் (மாணிக்கவாசகர் அருளியது)

(8-ம் திருமுறை

அன்றே, என் தன் ஆவியும்
உடலும், உடைமை எல்லாமும்
குன்றே அனையாய்! என்னை ஆட்
கொண்ட போதே கொண்டிலையோ?
இன்று ஓர் இடையூறு எனக்கு உண்டோ
என்தோள், முக்கண், எம்மானே!
நன்றே செய்வாய், பிழை செய்வாய்
நானே இதற்கு நாயகமே!

3) திருவிசைப்பா (கருவூர் தேவர் அருளியது)

பண் - பஞ்சமம்) (9-ம் திருமுறை

அற்புதத் தெய்வம் இதனின்மற்று உண்டோ?
அன்போடு தன்னை அஞ்செழுத்தின்
சொற்பதத் துள்வைத்து, உள்ளம் அள்ளூறும்
தொண்டருக்கு எண்திசைக் கனகம்
பற்பதக் குவையும், பைம்பொன் மாளிகையும்
பவளவாய் அவர் பணை முலையும்
கற்பகப் பொழிலும், முழுதும் ஆம், கங்கை
கொண்ட சோளேச் சரத்தானே.

4) திருப்பல்லாண்டு (சேந்தனார் அருளியது)

பண் – பஞ்சமம்) (9-ம் திருமுறை

தாதையத் தாள் அற வீசிய

சண்டிக்கு அவ்அண்டத்தொடும் உடனே

பூதலத்தோரும் வணக்கப் பொற்

கோயிலும் போனகமும் அருளிச்

சோதி மணிமுடித் தாமமும்

நாமமும் தொண்டர்க்கு நாயகமும்

பாதகத்துக்கு பரிசு வைத்தானுக்கே

பல்லாண்டு கூறுதுமே.

5) பெரிய புராணம் (சேக்கிழார் அருளியது)

(12-ம் திருமுறை

ஞானத்தின் திருஉருவை, நான்மறையின்

தனித்துணையை

வானத்தின் மிசை அன்றி மண்ணில் வளர்

மதிக் கொழுந்தை

தேன் நக்க மலர்க் கொன்றைச் செஞ்சடையார்

சீர்தொடுக்கும்

கானத்தின் எழுபிறப்பைக் கண் களிப்பக்

கண்டார்கள்.



திருச்சிற்றம்பலம்

உ

சிவாயநம:

திருச்சிற்றம்பலம்

பஞ்சபுராணம்–9

1) தேவாரம்

(திருநாவுக்கரசர் அருளியது)

திருத்தாண்டகம்) திருச்சிற்றம்பலம் (6-ம் திருமுறை

வானவன்காண் வாணவர்க்கு மேல்ஆனான்காண்
வடமொழியும் தென்தமிழும் மறைகள் நான்கும்
ஆனவன்காண் ஆன்ஐந்தும் ஆடினான்காண்
ஐயன்காண் கையில் அனல் ஏந்தி ஆடும்
கானவன்கான் கானவனுக்கு அருள்செய்தான்காண்
கருதுவார் இதயத்துகமலத்து ஊறும்
தேன்அவன் காண் சென்று அடையாச் செல்வன் தான் காண்
சிவன் அவன்காண் சிவபுரத்து எம் செல்வன்தானே.

2) திருவாசகம்

(மாணிக்கவாசகர் அருளியது)

(8-ம் திருமுறை

உம்பர்கட்கு அரசே! ஒழிவு அற நிறைந்த
யோகமே! ஊற்றையேன் தனக்கு
வம்பு எனப் பழுத்து, என் குடி முழுது ஆண்டு
வாழ்வு அற வாழ்வித்த மருந்தே!
செம்பொருள் துணிவே! சீர்உடைக்கழலே!
செல்வமே! சிவபெருமானே!
எம்பொருட்டு, உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்,
எங்கு எழுந்தருளுவது இனியே?

3) திருவிசைப்பா

(திருவாலியமுதனார் அருளியது)

பண் – நட்டராகம்) (8-ம் திருமுறை

வான நாடுடை மைந்தனே!
ஓஎன்பன்; வந்தருளவாய் என்பன்
பால்நெய் ஐந்துடன் ஆடிய
படர்சடைப் பால் வண்ணனே! என்பன்
தேனமர் பொழில் சூழ்தரு
தில்லையுல் திருநடம் புரிகின்ற
ஏன மாமணிப் பூணணி
மார்பனே! எனக்கருள் புரியாயே.

4) திருப்பல்லாண்டு (சேந்தனார் அருளியது)

பண் - பஞ்சமம்) **(9-ம் திருமுறை**

சொல் ஆண்ட சுருதிப்பொருள்
சோதித்த தூய்மனத் தொண்டர் உள்ளீர்
சில்ஆண்டில் சிதையும் சில
தேவர்சிறுநெறி சேராமே
வில்லாண்ட கனகத்திரள்
மேறு விடங்கள் விடைப்பாகன்
பல்லாண்டு என்னும் பதம்
கடந்தானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

5) பெரிய புராணம் (சேக்கிழார் அருளியது)

(12-ம் திருமுறை

மலர்மிசை அயனும் மாலும் காணுதற் கரிய வள்ளல்
பலர்புகழ் வெண்ணெய் நல்லூர் ஆவணப் பழமை காட்டி
உலகுய்ய ஆண்டு கொள்ள பெற்றவர் பாதம் உன்னித்
தலைமிசை வைத்து வாழும் தலைமை நந் தலைமையாகும்



திருச்சிற்றம்பலம்

உ

சிவாயநம:

திருச்சிற்றம்பலம்

பஞ்சபுராணம்-10

1) தேவாரம் (திருநாவுக்கரசர் அருளியது)

திருத்தாண்டகம்) **திருச்சிற்றம்பலம்** **(6-ம் திருமுறை**

தேவார்ந்த தேவனைத் தேவர் எல்லாம்
திருவடிமேல் அலர் இட்டுத் தேடி நின்று
நாவார்ந்த மறை பாடி நட்டம் ஆடி
நான்முகனும் இந்திரனும் மாலும் போற்றக்
காவார்ந்த பொழில் சோலைக் காணப்பேராய்
கழுக்குன்றத்து உச்சியாய் கடவுளே நின்
பூவார்ந்த பொன்அடிக்கே போதுகின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணியனே.

2) திருவாசகம் (மாணிக்கவாசகர் அருளியது)

(8-ம் திருமுறை

இன்று எனக்கு அருளி, இருள் கடிந்து, உள்ளத்து,
எழுகின்ற ஞாயிறே போன்று
நின்ற நின் தன்மை நினைப்பு அற நினைத்தேன்
நீ அலால் பிறிது மற்று இன்மை
சென்று சென்று, அணுவாய்த் தேய்ந்து தேய்ந்து ஒன்று ஆம்
திருப்பெருந்துறை உறை சிவனே
ஒன்று நீ அல்லை. அன்றி ஒன்று இல்லை
யார் உன்னை அறியகிற் பாரே?

3) திருவிசைப்பா (பூந்துருத்தி நம்பிகாடநம்பி அருளியது)

பண் - சாளரபாணி) **(9-ம் திருமுறை**

எம்பந்த வல்வினை நோய் தீர்த்திட்டு எமை ஆளும்
சம்பந்தன் காழியர்கோன் தன்னையும் ஆற்கொண்டு அருளி
அம்புஉந்து கண்ணாளும் தாளுனும் அணி தில்லைச்
செம்பொன்செய் அம்பலமே சேர்திருக்கை ஆயிற்றே!

4) திருப்பல்லாண்டு (சேந்தனார் அருளியது)

பண் - பஞ்சமம்) (9-ம் திருமுறை


ஆரார் வந்தார் அமரர் குழாத்தில்
அணியுடை ஆதிரை நாள்
நாராயணனொடு நான்முகன்
அங்கி இரவியும் இந்திரனும்
தேரார் வீதியில் தேவர் குழாங்கள்
திசை அனைத்தும் நிறைந்து
பாரார் தொல்புகழ் பாடியும் ஆடியும்
பல்லாண்டு கூறுதுமே.

5) பெரிய புராணம் (சேக்கிழார் அருளியது)

(12-ம் திருமுறை

"எந்நிலையில் நின்றாலும் என்கோலம் கொண்டாலும்
மன்னியசீர்ச் சங்கரன்தாள் மறவாமை பொருள் " என்றே
துன்னிய வேடம் தன்னைத் துறவாதே தூயசிவம்
தன்னை மிகும் அன்பனால் மறவாமை தலை நிற்பார்.

திருச்சிற்றம்பலம்



அபிராமி அம்மை பதிகம்




கலையாத கல்வியும், குறையாத வயதும்,
ஓர் கவடு வராத நட்பும்
கன்றாத வளமையும், குன்றாத இளமையும்
கழுபிணி இலாத உடலும்
சலியாத மனமும் அன்பு அகலாத மனைவியும்
தவறாத சந்தானமும்
தாழாத கீர்த்தியும் மாறாத வார்த்தையும்
தடைகள் வாராத கொடையும்
தொலையாத நிதியமும், கோணாத கோலும்
ஒரு துன்பம் இல்லாத வாழ்வும்
துய்யநின் பாதத்தில் அன்பும் உதவிப் பெரிய
தொண்டரோடு கூட்டு கண்டாய்
அலையாழி அரிதுயிலும் மாயனது தங்கையே
ஆதிகடவூரின் வாழ்வே
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி
அருள்வாய் அபிராமியே.

திருப்புகழ்



ஒரு தரம் சரவண பவா என்று சொல்பவர்
உள்ளத்தினில் நினைத்ததெல்லாம்
உடனே கைகூடுமென வேதங்கள் மொழியுதே
உண்மை அறிவான பொருளே
பரிவாகவே அனந்தந்தரம் சரவணபவா
என்று நான் சொல்லியும்
பாங்குமிகு காங்கேயா அடியேன் எண்ணியது
பலியாதிருப்பதேனோ
குருபரா முருகையா கந்தா கடம்பா சொல்
குமரா குகா ஷண்முகா,
கோலகலா வெற்றிவேலா எனக்கருள்
கொடுத்தாள்வை முத்தையனே
மருமலர்க்குழகா தேவகுஞ்சரி வள்ளி
மணவனே என் துணைவனே
வண்ணமயில் வாகன பொன்ஏரகப்பதியில்
வளர் சுவாமிநாத குருவே.

வாழ்த்து



வான்முகில் வழாதுபெய்க மலிவளம் சுரக்கமன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்முறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள்சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

சிவமணம் பரப்பும் செல்வர்கள்

தில்லை கார்த்திகேய சிவம்



கள்ளக்குறிச்சியிலிருந்து எட்டு கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ள ஊர் பொரசக்குறிச்சி. இவ்வூரிலுள்ள அருள்மிகு சோம நாதீசுவரர் ஆலயத்தின் அர்ச்சகருடைய திருக்குமாரர் **ஸ்ரீதில்லை. கார்த்திகேயசிவம்.** இவர் அடிக்கடி சிதம்பரம் சென்று பெருமானை வழிபடுவதால், நண்பர்கள் தில்லை கார்த்தி என்றழைக்க தில்லை பெயருடன் ஒட்டிக் கொண்டுள்ளது.

இவர் அன்பர்களுடன் சேர்ந்து **ஸ்ரீ திருமூல நாயனார் சிவவழிபாட்டு மன்றம்** என்ற அமைப்பை நிறுவி அதன்மூலம் சிவப் பணிகளைச் செய்து வருகிறார்.

மிகுந்த சிவபக்தியும் சிவாகம நூல்களில் பயிற்சியும் கொண்ட இவர் திருமுறைகளில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். ஆதீனத்தால் நடத்தப் படும் சித்தாந்த வகுப்பில பயின்ற சித்தாந்த ரத்தினம் பட்டம் பெற்றுள்ளார்.

சிவாகமங்கள் செழிக்கச் செய்ய வேண்டும் என்ற எண்ணம் மிகுந்த இவர் தமது திருமணத்தை வேத சிவாகமங் களில் கூறியபடி நடத்திக் கொண்டவர். அதைச் சிவாச்சாரியார்கள் கடை பிடித்தால் நலமாக இருக்கும் என்பதற்காக திருமணத்தில் வேத **விவாகமோக்த விவாஹ** பிரயோக மென்னும் கிரந்த நூலை மணமலராக வெளியிட்டுள்ளார். மேலும், ஆதிசைவரும், சிவ தீக்ஷையும் என்ற நூலை வெளியிட்டுள்ளார். மாத இதழ்களில் ஆகமம் திரு முறை தொடர்பான பல கட்டுரைகளை வரைந்துள்ளார்.

இவ்வட்டாரத்தில் இவரும் இவருக்கு உறுதுணையாக உள்ள **சிவத்திரு புவனேஷ் அவர்களும் சிவத்திரு க.முருகன்** அவர்களும் சிறப்பான முறையில் சிவப் பணி களைச் செய்து வருகின்றனர். இவர்கள் செய்து வரும் பணிகளில் பெருமைக் குரியது. இவ்வூரிலுள்ள சிறுவர் சிறுமியருக்கு உயர்ந்த ஒழுக்கங்களை போதிப்பதாகும். இக் குழந்தைகள் உருத்திராட்சம் அணிந்து திருநீறு பூசுகின்றனர்.

தினமும் கோயிலுக்கு வருகின்றனர். சிவபுராணம் ஓதுகின்றனர். பிரதோஷத்தில் சிவபுராணம் சொல்கின்றனர். ஒருவருக் கொருவர் பார்த்துக்கொள்ளும்போது சிவாய நம அண்ணா, சிவாயநம அக்கா என்று மந்திரப் பெயருடன் உறவுப் பெயரையும் கூறுகின்றனர். இது பார்ப்பதற்கும் கேட்பதற்கும் மகிழ்ச்சியாக உள்ளது. ❀



திருச்சிற்றம்பலம்

பஞ்ச புராணம் – விளக்கம்

பஞ்ச பராணம் என்பது, பன்னிரு திருமுறைகளில் மூவர் முதலிகள் அருளிய முதல் ஏழு திருமுறைகளில் இருந்து ஒரு திருப்பாடல்.

மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய எட்டாம் திருமுறையாகிய திருவாசகத்தில் இருந்து ஒரு திருப்பாடல்.

ஒன்பதாம் திருமுறையாகிய திருவிசைப்பாவிலிருந்து ஒரு திருப்பாடல், அதே, ஒன்பதாம் திருமுறையிலிருந்து சேந்தனார் அருளிய திருப்பல்லாண்டு திருப்பாடல் ஒன்று.

அடியார்களின் பெருமைகளை கூறும் சேக்கிழார் அருளிய பெரிய புராணத்தில் இருந்து ஒரு திருப்பாடல். என இவ்வைந்து திருப்பாடல்களையும் ஒருங்கே ஓதி வழிபடுவது பஞ்சபுராணம் விண்ணப்பமாகும். இதனை மகாவித்வான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்கள் தாம் அருளிய சிவாலய தரிசன விதி 6-ம் பாடலில்

"நிறையருட் பாடலாகி நிரப்புதே வாரம் யாரும்
அறைதிரு வாசகம் சீர் அமை இசைப் பாபல்லாண்டு
குறைதவிர் புராணம் இன்ன கொணடுறத் துதித்தல் செய்து
மறைபுகழ் விபூதி மேனி வளைந்திர கையால் ஏற்று" என்று பாடியருளுகின்றார்.

வாழ்த்து



மழை வழங்குக மன்னவ னோங்குக
பிழையில் பல்வள மெங்கும் பெருக
தழைக வஞ்செழுத்தோசை தரையெலாம்
பழைய **வைதிக சைவம்** ப்ரக்கவே.

-கோயிற் புராணம் ஸ்ரீமத் உமாபதிசிவம்

இயல்புஎன்றும் திரியாமல் இமயம் ஆதி
எண்குணமும் காட்டி, அனபால் இன்பம் ஆகிப்,
பயன் அருளப் பொருள்கள்பரி வாரம் ஆகிப்
பண்பு உறவும் சௌபான பக்ஷம் காட்டி,
மயல்அறு மந்த ரசிகைஷ ஜோதி டாதி
மற்றுஅங்க நூல் வணங்க, மௌன மோலி அயர்வுஅறச்
சென் னியில் வைத்து **ராஜாங்கத்தில்**
அமர்ந்தது வைதிகசைவம் அழகு இது அந்தோ.

– ஆகார புவனம்-சிதம்பர ரகசியம்
ஸ்ரீமத் தாயுமான சுவாமிகள்

ராஜாங்கத்தில்	–	மேலான நிலையில்
வைதிக சைவம்	–	வேத நெறி வழுவாத சைவம்

சிவப்பணியில்



T.S.ரவி (எ) ஷண்முககுருக்கள், தேவபாண்டலம்
S.சாம்பசிவகுருக்கள், நல்லூர்
A.கார்த்திகேயகுருக்கள், கள்ளக்குறிச்சி
S.ஜெயமுருகன் குருக்கள், பாக்கம்
K.கணபதிஐயர், சங்கராபுரம்
C.ஜெயேந்திரகேசவன், கள்ளக்குறிச்சி
புவனேஷ்.K.முருகன், பொரசக்குறிச்சி
A.வேல்முருகன், மலைக்கோட்டாலம்
K.தசரதன், பொரசக்குறிச்சி
P.வேலுமணி, பொரசக்குறிச்சி

ஸ்ரீ சத்யாஆப்செட்
கள்ளக்குறிச்சி. 8973937656

திருச்சிற்றம்பலம்